செய்தி வெளியீடு எண்: 626 நாள்:28.08.2020

**செய்தி வெளியீடு**

**"வன உரிமை சட்டம் 2006 அமலாக்கம்" குறித்த குழு விவாதம்**

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு (முன்னாள் மாநில திட்டக்குழு), "பழங்குடியினர் மற்றும் பாரம்பரியமாக வனத்தில் குடியிருப்பவர்கள் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம் 2006–ல் 1. கிராமசபையின் நிலை, 2. உட்கோட்ட அளவிலான குழுவின் நிலை, 3. மாவட்ட அளவிலான குழுவின் நிலை மற்றும் 4. தனிநபர் உரிமைகள் மற்றும் 5. சமூக உரிமைகள் குறித்தக் குழு விவாதக் கூட்டம் காணொளி வாயிலான பங்கேற்பு முறையுடன் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் (முன்னாள் மாநிலத் திட்டக் குழு) மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்களின் தலைமையில் 28.08.2020 அன்று காலை 11.00 மணியளவில் மனித மேம்பாட்டுக் காணொளி அரங்கம், எழிலகம் சென்னை–05ல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முனைவர். துரைராசு, இ.வ.ப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், கூடுதல் தலைமை செயலாளர்கள், திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, திரு. அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, முனைவர். சந்தீப் சக்சேனா இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, முனைவர். பு.செ. அர்ச்சனா கல்யாணி, இ.வ.ப., குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, திரு ரிட்டோ சிரியாக், இ.வ.ப., இயக்குநர், பழங்குடி நலத்துறை, மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வன அலுவலர்கள் மற்றும் வன உரிமைச் சட்டம் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## <u>இச்சட்டத்தின் குறிக்கோள்கள்</u>

1) பழங்குடியினர் மற்றும் பாரம்பரியமாக வனத்தில் குடியிருப்பவர்களுக்கு அவர்களின் வசம் உள்ள நில உரிமைகளை வழங்குவது.
2) பழங்குடியினர் மற்றும் பாரம்பரியமாக வனத்தில் குடியிருப்பவர்களுக்கு சிறு வன விளைபொருட்களைச் சேகரிக்க, பயன்படுத்த மற்றும் அப்புறப்படுத்துவதற்கான உரிமைகளை வழங்குதல்
3) பழங்குடியினர் மற்றும் பாரம்பரியமாக வனத்தில் குடியிருப்பவர்களுக்கு சமுதாய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் நிலத்திற்கான உரிமைகளை வழங்குதல்

மேற்படி குழு விவாத தலைப்புகளைப் பழங்குடியினர் நல இயக்குநர், நீலகிரி, கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**